www.Padasalai.Net www.TrbTnpsc.com

11 R

# அரையாண்டுத் தேர்வு - 2023

Reg. No. [ | | 1 | 1 | 1 | 6 | 2 ]

நேரம் : 3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள் : 90

### பகுதி – I

குறிப்பு 1. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

2.கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. **14 x 1 = 14**

1. பாயிரம் இல்லது ...................... அன்றே. அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. "வம்ச விருத்தி" என்னும் சிறுகதைத் தொகுப்பு யாருடையது?
   அ) இந்திரன் ஆ) அ. முத்துலிங்கம் இ) சு. வில்வரத்தினம் ஈ) பிரமிள்
3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன. அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
4. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்.
5. "உண்டால் அம்ம இவ்வுலகம்" – பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
   அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) பதிற்றுப்பத்து
6. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை அ) 9 ஆ) 3 இ)27 ஈ) 13
7. கல்வி கற்பிக்கப்படும் இடங்களைப் "பள்ளி" என்று கூறும் நூல் எது?
   அ) சிலப்பதிகாரம் ஆ) சீவக சிந்தாமணி இ)பெரிய திருமொழி ஈ) நாலடியார்
8. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது? அ) காய்முன் நேர் ஆ) காய்முன் நிரை இ) கனிமுன் நிரை ஈ) மா முன் நேர்
9. குறிஞ்சித் திணைக்குரிய சிறுபொழுது அ) மாலை ஆ) வைகறை இ) யாமம் ஈ) நண்பகல்
10. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளில் ஒன்று அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
11. ஆக்கப் பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்
12. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் யார்? யாரிடம் கூறியது?
    அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம் இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
13. கவிஞர் அப்துல் ரகுமானின் எந்த நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது?
    அ) பால்வீதி ஆ) நேயர் விருப்பம் இ) பித்தன் ஈ) ஆலாபனை
14. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்
    அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம் இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

### பகுதி II பிரிவு – I

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. **3 x 2 = 6**

15. எதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின – தொடரின் பொருள் யாது?
16. உவமை, உருவகம் - வேறுபடுத்துக.
17. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடைதருக **2 x 2 = 4**

19. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
21. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

### பிரிவு – 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடைதருக **7 x 2 = 14**

22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) துஞ்சல் ஆ) பறித்தார்
23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக அ) கற்பொடி ஆ) அணிந்துரை
24. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக உலை, உளை, உழை
25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. கால்நடை
26. பின்வரும் ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக. அ) Fine Arts ஆ) Disaster
27. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
    ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்
28. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
29. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுது.
    1) எலியும் நுழையும்: எழிலரசி கையும் நுழையும்
    2) பூவின் உறுப்பும் நானே: புன்னகையின் பிறப்பிடமும் நானே........................
    (மை, வளை, மதி, இதழ்)



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

30. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க அ) விசா ஆ) பாஸ்போர்ட்

## பகுதி – III பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக **2 x 4 = 8**

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
33. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" – உவமையைப் பொருளுடன் விளக்குக.
34. "சேரநாடு செல்வ வளம் மிக்கது" என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. **2 x 4 = 8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.
36. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
37. ஃபிரெஸ்கோ ஓவியங்கள்: கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
38. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்து வரிகளில் எழுதுக.

### பிரிவு – 3

எவையேனும் மூன்றனுக்கு விடைதருக **3 x 4 = 12**

39. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக (அல்லது)
உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. குறிஞ்சித் திணை – முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களைப் பட்டியலிடுக.
41. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
  பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
  மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
  காட்சி கெடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
  பேதமை யற்றிடும் காணீர்

- பாரதியார்.

42. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.

| பேசு / எழுது / வணங்கு | → | இன் / கிறு / வ் / ஆ | → | ஆன் | → → → → |
| --- | --- | --- | --- | --- | --- |

43. தமிழாக்கம் தருக
1. Nobody can hurt me without my permission
2. The weak can never forgive, forgiveness is the attribute of the strong.
3. The Pen is mightier than the Sword
5. Culture does not make people. People make culture

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **3 x 6 = 18**

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளை தொகுத்துரைக்க. (அல்லது)
ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க (அல்லது)
ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.
46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுக.

## பகுதி – V

பின்வரும் பாடலை அடிபிறழாமல் எழுதுக **4 + 2 = 6**

47. அ. "சிற்றூரும் வரப்பெடுத்த..." எனத் தொடங்கும் புரட்சிக்கவிப் பாடலை எழுதுக.
ஆ. "உண்ணின்" என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com